பக்கங்கள் 16+6

# மாலை முரசு

கனடா முரசு இணைப்பு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2055 ஆனி 12 செவ்வாய்க்கிழமை 25.06.2024 அதிர்வு 329

## இந்திய மீனவரை விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்

### ஜெய்சங்கருக்கு ஸ்டாலின் கடிதம்



இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட அனைத்து இந்திய மீனவர்களையும், அவர்களது 04▶




# இந்திய மீனவர்களின் தாக்குதலில் கடற்படைச் சிப்பாய் ஒருவர் மரணம்

## 10 மீனவர்கள் படகுடன் சிறைப் பிடிப்பு

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணத்தில் இந்திய மீனவர்களின் தாக்குதலுக்கு இலக்கான கடற்படைச் சிப்பாய் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

காங்கேசன்துறை கடற்படை முகாமில் கடமையாற்றும் ரத்நாயக்க எனும் கடற்படைச் சிப்பாயே உயிரிழுந்துள்ளார்.

காங்கேசன்துறை கடற்படை முகாமைச் சேர்ந்த கடற்படையினர் இன்று அதிகாலை கடலில் சுற்றுக் காவல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

அதன்போது நெடுந்தீவு கடற்பரப்பை அண்டிய பகுதியில் படகொன்றில் அத்துமீறி நுழைந்து இந்திய மீனவர்கள் கடற்றொழிலில் ஈடுபட்டுள்ளதை அவதானித்து அவர்களைக் கைது செய்யக் கடற்படையினர் முயன்றனர்.

04▶

# உயிரிழந்த கடற்படைச் சிப்பாய்க்கு யாழ். கடற்றொழிலாளர்கள் இரங்கல்

(எஸ்.நிதர்ஷன்)

இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறிய இந்திய மீனவர்களை இழுவைப் படகுடன் கைது செய்ய முற்பட்டபோது இலங்கைக் கடற்படைச் சிப்பாய் ஒருவர் உயிரிழந்தமை துன்பியல் சம்பவம் என்று யாழ்ப்பாணம் மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசங்களின் சம்மேளனத் தலைவர் ஸ்ரீ கந்தவேல் புனித பிரகாஷ் தெரிவித்தார்.

யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சமாசத்தில் இன்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். 04▶








# அதிக ஞாபக சக்தியால் சோழன் உலக சாதனை!

(மஸ்கெலியா)

மக்கள் உதவி நிதியத்துடன் இணைந்து சோழன் உலக சாதனைப் புத்தக நிறுவனம் நடத்திய உலக சாதனை படைக்கும் முயற்சியில், கம்பஹா மாவட்டத்தின் ஹுனுபிடிய பகுதியில் வசித்துவரும் மொஹமட் ஷபான் மற்றும் பாத்திமா இபாஸா ஆகியோரின் 3 வயதான மகன் மொஹமட் ஷம்லான் சாதனை படைத்துள்ளார்.

இவர் எண்கள், பூக்கள், பழங்கள், பறவைகள், விலங்குகள், தானியங்கள், மரக்கறி வகைகள், மனித உடலின் உள் உறுப்புகள், ஊர்வன, பூச்சிகள், மீன்கள், சிங்கள, ஆங்கில, அரேபிய மொழி எழுத்துகள், அரசியல் தலைவர்கள், பல்வேறு தொழில்கள்,உலகப் புகழ் பெற்ற கோபுரங்கள், புகழ் பெற்ற கிரிக்கெட் வீரர்கள், தேசிய வீரர்கள், உணவு வகைகள் மற்றும் வீட்டுப் பாவனைப் பொருள்கள் என 1098 உருவப் படங்களை அடையாளம் காட்டி அவற்றின் பெயர்களை மனப்பாடமாகக் கூறி சோழன் உலக சாதனைப் புத்தகத்தில் தனது பெயரை பதிவு செய்தார்.

இதன் மூலம் 3 வயதில் உலகின் அதிக ஞாபகத் திறன் கொண்ட குழந்தை என்ற பெயரைப் பெற்றுள்ளார் குழந்தை ஷம்லான்.

இதற்கான நிகழ்வு கம்பஹா மாவட்டத்தில் நடைபெற்றது. இதன் போது நடுவர்களாக இருந்து குழந்தையை முறையாகப் பரிசீலனை செய்து உலக சாதனையாகப் பதிவு செய்தார்கள் சோழன் உலக சாதனைப் புத்தக நிறுவனத்தின் இலங்கைக் கிளையின் துணைத் தலைவர் ஸ்ரீ நாகவாணி ராஜா மற்றும் கண்டி மாவட்டத்தின் துணைத் தலைவர் சந்திரமோகன் ஆகியோர்.

சோழன் உலக சாதனை படைத்த குழந்தை ஷம்லானுக்கு சட்டகம் செய்யப்பட்ட சான்றிதழ், தங்கப் பதக்கம், நினைவுக் கேடயம் மற்றும் அடையாள அட்டை போன்றவற்றை நடுவர்கள் வழங்கிப் பாராட்டினர்.

இந்த சோழன் உலக சாதனை நிகழ்வில் கெலனிய பகுதியின் கிராம நிர்வாக அலுவலர் சுனில் ஷாந்த மற்றும் கம்பஹா மாவட்ட ஜமியதுல் உலமா அல் ஹாஜ் நுஹுமான் இனாமி போன்றோர் பங்கு கொண்டு உலக சாதனை படைத்த குழந்தையையும் பெற்றோரையும் வாழ்த்திப் பாராட்டினனர்.

# உகந்தை,கதிர்காமத்திற்கான பஸ் சேவை மட்டக்களப்பில் இருந்து 28 இல் ஆரம்பம்!

(வி.ரி. சகாதேவராஜா)

மட்டக்களப்பில் இருந்து உகந்தை மற்றும் கதிர்காமத்துக்கான பஸ் சேவை எதிர்வரும் 28 ஆம் திகதி ஆரம்பமாகின்றது என்று மட்டக்களப்பு போக்குவரத்து சாலையின் அத்தியட்சகர் கந்தசாமி சிறிதரன் தெரிவித்தார்.

கதிர்காமம் பஸ்சேவை 30 இல் ஆரம்பமாகும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

மட்டக்களப்பில் இருந்து கதிர்காமத்துக்கான ஒரு வழிப் பாதை பயணத்துக்கான கட்டணம் 1050 ரூபா. முற்பதிவுக்கு 35 ரூபா. காலையில் ஆறு மணி, ஏழு மணிக்கு இரண்டு பஸ்கள் புறப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று கதிர்காமத்தில் இருந்து காலை 8 மணிக்கு ஒரு பஸ் புறப்படவுள்ளது.

இதேவேளை மட்டக்களப்பில் இருந்து உகந்தை மலை முருகன் ஆலயத்துக்கான பஸ் சேவைக்கான கட்டணம் 800 ரூபா. முற்பதிவுக்கு 35 ரூபா.

40 பேர் சேர்ந்து தனியாக ஒரு பஸ் பெற்று கொள்ளலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அடியார்களின் தொகை தேவைக்கேற்ப பஸ் சேவைகளின் எண்ணிக்கை அதிகரித்து கொடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

# ஞானச்சுடர் வெளியீட்டுவிழா

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையின் மாதாந்த வெளியீடான ஞானச்சுடர் ஆன்மீக சஞ்சிகையின் ஆனி மாத இதழ் வெளியீட்டுவிழா எதிர்வரும் 28 ஆம் திகதி வெள்ளிக் கிழமை காலை 10.30 மணிக்கு சந்நிதியான் ஆச்சிரமமண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஆச்சிரமப் பொறுப்பாளர் அமுத கலாசுரபி கலாநிதி செ. மோகனதாஸ் சுவாமி தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் வெளியீட்டுரையை நீர்வைமணி தியாகராஜசர்மாவும் மதிப்பீட்டுரையை க. கைலைநாதனும் வழங்குவர்.

# சிங்கள மொழி பயிற்சிச் சான்றிதழ்கள் வழங்கல்

(எஸ்.இரவீந்திரன் )

தமிழ் மொழி மூல அரச சேவையாளர்களுக்கு சிங்கள மொழி பயிற்சி நெறி முடிவில் சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு குருநாகல் அல் ஹிஸ்புல்லா மத்திய மகா வித்தியாலய பிரதான மண்டபத்தில் நடைபெற்றது.

தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் வளவாளர்களான எப் .எம்.பௌசர், திருமதி புஸ்பநாதன் புஷ்பராணி ஆகியோரின் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் ஹட்டன் வலயக் கல்வி அலுவலகப் பாட இணைப்பாளர் வி.ஏ. பெர்ணண்டோ பிரதம அதிதியாகவும் பாடசாலை அதிபர் எம்.முனாப் விசேட அதிதியாகவும் கலந்து கொண்டு சான்றிதழ்கள் வழங்கினர்.







# மஸ்கெலியாவில் குளவிக்கொட்டுக்கு இலக்கான குடும்பப் பெண் சிகிச்சை பலனின்றி உயிரிழப்பு!





(மஸ்கெலியா நிருபர்)

மஸ்கெலியாவில் குளவிக் கொட்டுக்கு இலக்கான குடும்பப் பெண் ஒருவர் சிகிச்சை பலனின்றி பேராதனை ஆதார வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார்.

சிவகுமார் அந்தோனி டெரிண்டா (வயது 44) என்ற இரண்டு பிள்ளைகளின் தாயே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

மேற்படி பெண் கடந்த 19 ஆம் திகதி மஸ்கெலியா பெருந்தோட்ட யாக்கத்தின் மஸ்கெலியா கிலன்டில் தோட்ட கிலன்டில் பிரிவில் பணிபுரிந்து கொண்டு இருந்த வேளையில் குளவிக் கொட்டுக்கு இலக்கான நிலையில் மஸ்கெலியா மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு பின்னர் டிக்கோயா கிளங்கன் ஆதார வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்தார்.

அவர் அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக பேராதனை போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்த நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்தார் என்று மஸ்கெலியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி புஷ்பகுமார தெரிவித்தார்.

# ஹெரோயின் விற்பனையில் ஈடுபட்ட ஆசிரியை சிக்கினார்



ஹெரோயின் போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்டு வந்தார் எனக் கூறப்படும் அநுராதபுரம் பகுதியில் உள்ள அரச பாடசாலையொன்றின் ஆசிரியை கைது செய்யப்பட்டுள்ளார்.

மேற்படி ஆசிரியை தனது கணவருடன் இணைந்து ஹெரோயின் போதைப் பொருள் விற்பனையில் ஈடுபட்டு வந்துள்ளார் எனத் தெரியவந்துள்ளது. விற்பனைக்காக வைத்திருந்த ஹெரோயினும் மீட்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டுள்ள ஆசிரியையும், அவரின் கணவரும் நீதிமன்ற உத்தரவின் பிரகாரம் தடுத்துவைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு வருகின்றனர்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### உயிரிழந்த...

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“இந்திய இழுவைப் படகுகள் எமது கடல் பகுதிக்குள் அத்துமீறி நுழைந்து எமது மீனவர்களின் வாழ்வாதாரத்தைத் தொடர்ச்சியாக அழித்து வருகின்றது.

இதன் காரணமாக நாம் இலங்கைக் கடற்படையினருக்குப் பல்வேறு அழுத்தங்களை வழங்கி வரும் நிலையில், எங்களது வாழ்வாதாரத்தைக் காப்பாற்றுவதற்காக அத்துமீறும் இந்திய மீன்பிடியாளர்களை அவர்கள் கைது செய்து வருகின்றார்கள்.

இவ்வாறான நிலையில் இன்று அதிகாலை இந்திய இழுவைப் படகைக் கைது செய்ய முற்பட்டபோது கடற்படைச் சிப்பாய் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நமது வாழ்வாதாரத்தைக் காப்பாற்றுவதற்காக இந்திய மீனவர்களுடன் போராடிய அந்தக் கடற்படைச் சிப்பாய்க்கு எமது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்வதோடு அவரின் குடும்பத்தினருக்கும் எமது அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

கடற்படைச் சிப்பாய் உயிரிழந்துள்ள நிலையில் எவர் பக்கமானாலும் உயிர் இழப்பை நாம் விரும்பவில்லை.

இந்திய மீனவர்களிடம் நாங்கள் விநயமாகக் கேட்டுக்கொள்வது என்னவெனில், உங்கள் கடல் எல்லையைத் தாண்டி எங்கள் கடல் எல்லைக்கு வர வேண்டாம். அவ்வாறு நீங்கள் வருவதால் கடற்படையினர் உங்களை விரட்டுவதற்காகக் கடலில் போராட வேண்டிய தேவை ஏற்படுகின்றது. இதன் காரணமாக தேவையற்ற சம்பவங்கள் கடலில் இடம்பெறுகின்றன.” – என்றார்.

### இந்திய மீனவர்களின்...

கடற்படை படகில் இந்திய மீனவர்களின் படகுக்குச் சென்ற கடற்படைச் சிப்பாய்கள் மீது இந்திய மீனவர்கள் தாக்குதல் மேற்கொண்டனர். அதன்போது கடற்படைச் சிப்பாய் ஒருவர் காயமடைந்த நிலையில் கடலில் வீழ்ந்து உயிரிழந்தார்.

அதையடுத்து மேலதிக கடற்படையினர், இந்திய மீனவர்களின் படகு நின்ற இடத்துக்குச் சென்று படகில் இருந்த 10 மீனவர்களையும் கைது செய்து கடற்படைப் படகில் ஏற்றினர்.

கைது செய்யப்பட்ட 10 மீனவர்களும், அவர்களின் படகுடன் காங்கேசன்துறை கடற்படை முகாமுக்குக் கொண்டு வரப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

உயிரிழந்த கடற்படைச் சிப்பாயின் சடலம் யாழ். போதனா வைத்தியசாலையில் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் கடற்படையினரும் பொலிஸாரும் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

### இந்திய மீனவரை...

படகுகளையும் உடனடியாக விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கரிடம் தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்களை இலங்கை அரசு விடுவிக்கவும், பறிமுதல் செய்யப்பட்ட படகுகளை விரைந்து விடுவிக்கவும் தமிழக முதலமைச்சர், ஜெய்சங்கரிடம் எழுத்து மூலம் கோரிக்கை விடுத்துள்ளார்.

“எனது முந்தைய கடிதத்தில் நான் சுட்டிக் காட்டியது போல், கைதுகள் மற்றும் மிரட்டல் சம்பவங்கள் தடையின்றி தொடர்கின்றன. இதனால் வாழ்வாதாரம் இழக்கப்படுகின்றது.” – என்று தமிழக முதலமைச்சர் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

“இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்களையும், அவர்களது படகுகளை உடனடியாக விடுவிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.” – என்றும் அவர் தனது கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ளார்.




# கார்மேல் பற்றிமாவில் மருத்துவ முகாம்

(வி.ரி.சகாதேவராஜா)

கல்முனை கார்மேல் பற்றிமா தேசிய பாடசாலையின் அதிபர், ஆசிரியர் மற்றும் உத்தியோகத்தர்களுக்கான மருத்துவ முகாம் வியாழக்கிழமை இடம்பெற்றது.

கல்முனை ஆதார வைத்தியசாலையின் பணிப்பாளர் டாக்டர் எஸ்.சந்திரசேன, திட்டமிடல் பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் ஜே.மதன் மற்றும் கல்முனை ஆதார வைத்தியசாலையின் வைத்தியர்கள், தாதிய உத்தியோகத்தர்கள், சிற்றூழியர்கள் உள்ளிட்ட குழுவினர்கள் மருத்துவ முகாமை நடத்தினர்.

இதன் போது பாடசாலையில் கடமையாற்றும் அதிபர், ஆசிரியர்கள், உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட சுமார் 80 பேருக்குத் தொற்றாநோய் நிலை பரிசோதனைகள் மற்றும் பற்சுகாதார பரிசோதனைகள் செய்யப்பட்டன.

மேலும் அவர்களுக்கான சுகாதார போதனைகள் மற்றும் விழிப்புணர்வுகளும் வழங்கப்பட்டன.






# வெளிநாட்டு பணியக ஊடக மன்றம் ஸ்தாபித்தல் நிகழ்வு

(எம். எப். றிபாஸ்)

இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தின் ஏற்பாட்டில் “வெளிநாட்டு வேலை வாய்ப்பு துறைக்கு அறிவுபூர்வமான ஊடக நுழைவு” என்னும் தொனிப் பொருளில் ‘வெளிநாட்டு பணியக ஊடக மன்றத்தை ஸ்தாபித்தல்’ நிகழ்வு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை (23) அம்பாறை மொண்டி விடுதியில் நடைபெற்றது.

தொழில் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் எச். எம். வீரசிங்க உட்பட அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த தமிழ் மற்றும் சிங்கள மொழிமூல ஊடகவியலாளர்கள் பலர் கலந்துகொண்டனர்.

நாடளாவிய ரீதியில் வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியக ஊடக மன்றங்களை ஸ்தாபிக்கும் பணிகள் நடைபெற்றுவரும் நிலையில், அம்பாறை மாவட்டத்திலும் இந்த ஊடக மன்றம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே பல மாவட்டங்களில் பணியக ஊடக மன்றங்களை ஸ்தாபிக்கும் பணி நிறைவு பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.





# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## காதில் பூச்சூற்ற வரும் மீட்பர்

நாட்டு மக்களுக்கு நாளை புதன்கிழமை இரவு 8 மணிக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தொலைக்காட்சி மூலம் உரையாற்றவிருக்கின்றார் என அறிவிக்கப்படுகின்றது.

நாட்டு மக்களுக்கு அவர் என்ன கூறப் போகின்றார் என்பது உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படவில்லையாயினும், அது பற்றிய விவரங்கள் சாடமாடையாக வெளியிடப்பட்டுள்ளன.

அந்த அறிவிப்பை ஒட்டிய எடுப்புகளுக்கும் குறைவில்லை. 'இதோ ஒரு நற்செய்தி!' - என்று ஆரவார போஸ்டர்கள் நாடெங்கு ஒட்டித் தள்ளப்பட்டுள்ளன.

நற்செய்தி சொல்லவரும் நவீன மீட்பராக தம்மை அர்த்தப்படுத்தித்தான் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தக் காரியத்தை செய்வித்திருப்பார் போலும்.

ஜனாதிபதி தேர்தல் நெருங்கும் சமயத்தில் இத்தகைய பரப்புரை நாடகங்களுக்கும் பிரசார தந்திரங்களுக்கும் குறைவிருக்காது. அது வழமை.

அரச ஊடகத்தையும் பதவி அதிகாரத்தையும் வைத்துக்கொண்டு தேர்தல் பிரச்சாரத்திற்கான அடித்தளத்தை ஓசியில் முன்னெடுக்கும் ஜனாதிபதியின் நரித்தந்திரக் காய் நகர்த்தலே இந்த எடுப்புகள். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாளை எதனை அறிவிப்பார் என்பதை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேரடியாகவே கோடி காட்டி அது தொடர்பில் தமது கண்டனத்தையும் பதிவு செய்திருக்கின்றார்.

''நாடு வங்குறோத்து நிலையில் இருந்து மீண்டுவிட்டதாக ஜனாதிபதி அறிவிக்க உள்ளார். அவரால் எவ்வாறு அதனை அறிவிக்க முடியும்? இது மக்களை ஏமாற்றுவதற்காக மேற்கொள்ளப்படும் முயற்சி'' -என சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

''சர்வதேச நிதிவிவகாரங்கள் தொடர்பில் ஆய்வுகளை மேற்கொள்ளும் நிறுவனங்களே ஒரு நாடு வங்குறோத்து நிலையில் இருந்து மீண்டுள்ளதா இல்லையா என்பதை தீர்மானிக்கும். மாறாக ஆட்சியாளர்களால் தீர்மானிக்க முடியாது'' - என்றும் சஜித் பிரேமதாஸா சுட்டிக்காட்டியுள்ளார்.

''இன்னமும் பல்வேறு துறைகளில் இருந்து நாடு மீள வேண்டியுள்ளது. பரீட்சை எழுதியவர்களால் பெறுபேறுகளை வெளியிட முடியாது. அதனைப் பரீட்சைகள் திணைக்களத்தால்தான் வெளியிட முடியும். அவ்வாறான சூழலில் ரணில் எவ்வாறு நாடு வங்குறோத்து நிலையில் இருந்து மீண்டுள்ளதாகப் பொய் கூற முடியும்?'' எனவும் கேள்வியெழுப்பியுள்ளார் சஜித் பிரேமதாஸ.

நியாயமான கேள்விதான். அதற்கு ஆளும் தரப்பிடமிருந்தோ, ஜனாதிபதியிடமிருந்தோ பதில் ஏதும் வரும் என்று எதிர்பார்க்க முடியாது.

பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்பதற்கு உதவ முன்வந்திருக்கும் சர்வதேச நாணய நிதியம், அதன் நிபந்தனைகள் காலம் தாழ்த்தியேனும் நிறைவேற்றப்பட்டிருப்பதால் அதைக் கவனத்தில் எடுத்துக் கொண்டு இலங்கைக்கு இரண்டாவது கட்ட கடன் தொகையை விடுவிக்கத் தயாராகி இருக்கின்றது.


இதனை நாடு வங்குறோத்து நிலையில் இருந்து மீண்டதாக அர்த்தப்படுத்த முடியாது.

தான் பெற்ற கடன்களை - கடப்பாடுகளை - சர்வதேச பொறுப்புக்களை - உரிய தவணைகளில் மீளச் செலுத்த முடியாது வக்கற்ற நிலைக்குச் சென்ற போது கடனிறுக்க வழியற்ற வங்குறோத்து நாடு என்ற பெயர் இலங்கைக்குக் கிடைத்தது.

அந்தக் கடன் தொகைகளை - தவணைப் பணத்தை - கொடுப்பனவுக் கடப்பாடுகளை - இலங்கை இன்னும் மீளச் செலுத்தத் தொடங்கவில்லை. உரிய தவணைப் பணக் கொடுப்பனவுகளை காலந்தவறாமல் மீளச் செலுத்தும் வழமை நிலைமை ஏற்பட்டால் மட்டுமே வங்குறோத்து நிலையில் இருந்து நாடு மீண்டதாக அர்த்தப்படுத்த முடியும்.

கடன் மீளளிக்க வேண்டிய நாடுகள் மற்றும் தரப்புகளுடன் பேச்சு நடத்தும் அரசு, அக்கடன் தவணைக் கொடுப்பனவுகளை மீளச் செலுத்தத் தொடங்குவதற்கு ஆறு ஆண்டுகள் சலுகை காலம் - கருணைக்கால அவகாசம் - வழங்கும்படி மன்றாடுகின்றது. அது கிடைக்கும் சூழல் இருப்பதாகவும் கூறப்படுகின்றது.

அது கிடைத்தால், இனி கடன் தவணைப் பணத்தைக் கெடுத்த வேண்டிய கடப்பாடு 6 ஆண்டுகளுக்குப் பின்னர்தான். இப்போது இல்லை. இப்போது கடன் செலுத்தும் கடப்பாடு இல்லை என்பது என்றால் நாடு வங்குறோத்து நிலையில்இருந்து மீண்டு விட்டது என்று அர்த்தம் என நாளைய உரையில் மக்கள் காதில் பூச்சுற்றத் தயாராகி இருக்கின்றார் ஜனாதிபதி விக்கிரமசிங்க. அவ்வளவுதான்.



# சந்நிதியான் ஆச்சிரமத்தால் அருணகிரிநாதர் குருபூசை!

யாழ்ப்பாணம், வடமராட்சி, தொண்டைமானாறு, சந்நிதியான் ஆச்சிரமத்தால் முருகபக்தர் அருணகிரி நாதருடைய குரு பூசைப் பெருவிழா சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டு பேரவையின் ஏற்பாட்டில் நடத்தப்பட்டது.

சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகன் சுவாமிகள் முன்நிலையில் சைவ கலை பண்பாட்டு பேரவை உறுப்பினர், ஆசிரியர் வாகீசன் தலைமையில் சுழிபுரம் அம்பாள் அறநெறி பாடசாலை மாணவர்களுன் பஞ்ச புராண ஓதுதலுடன் சனிக்கிழமை இடம்பெற்றது.

இதில் தொடக்க உரையைச் சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டு உறுப்பினர் ஆசிரியர் இ.வாகீசன் நிகழ்த்தினார்.

மூளாய், வதிரன்புலோ சித்தி விநாயகர் ஆலய ஞான ஒளி அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வும், யாழ்ப்பாண கல்லூரி மாணவு ஆருத்திரா ஜெயமோகனின் முருகன் நடனமும், வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்க உறுப்பினர் செல்வன் ப.பிரவீனனின் அருணகிரிநாதர் எனும் தலைப்பில் சொற்பொழிவும், அதனை தொடர்ந்து இசைத்துறை கலைமாணி திருமதி சித்திரா ஹவிக்குமாரின் திருப்புகழிசையும் இடம்பெற்றன.



தொடர்ந்து அருணகிரியான் எனும் தலைப்பில் இசைப் பேராசான் இசைக் கலாநிதி முன்னாள் இசைத்துறை தலைவர் நா.வி.மு.நவரத்தினம் அருணகிரியான் எனும் தலைப்பில் பிரசங்கம் செய்தார்.

இதன்போது அறநெறி மாணவர்களுக்குப் பாடசாலை உபகரணங்கள் வழங்கப்பட்டன.

இதேவேளை, சந்நிதியான் ஆச்சிரமத்தால் திருகோணமலை கப்பல்துறை சரஸ்வதி வித்தியாலயத்துக்கு பாதுகாப்பு வேலி அமைப்பதற்க்காக நாலாம் கட்டமாக 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபா நிதி வழகங்பட்டது. இதுவரை 7லட்சத்து 50 ஆயிரம் ரூபா நிதி வழங்கப்பட்டுள்ளது.





# கிழக்கு மாகாண போட்டிகளுக்கு தெரிவான கரப்பந்தாட்ட அணிகள்

**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

நிந்தவூர் அல்-அஷ்ரக் தேசிய பாடசாலையின் 16 மற்றும் 20 வயது கரப்பந்தாட்ட அணிகள் வெள்ளிப் பதக்கம் வென்று கிழக்கு மாகாண மட்டப் போட்டிகளுக்குத் தெரிவாகியுள்ளன.

கல்முனை வலய பாடசாலைகளுக்கு இடையிலான வலய மட்டக் கரப்பந்தாட்ட போட்டிகள் நிந்தவூர் அல்-அஷ்ரக் தேசிய பாடசாலை மைதானத்தில் இடம்பெற்றன.

இதில் பங்குபற்றிய நிந்தவூர் அல்-அஷ்ரக் தேசிய பாடசாலையின் 16 மற்றும் 20 வயது பிரிவு அணியினர் வெள்ளிப் பதக்கம் வென்று கிழக்கு மாகாண மட்டத்துக்குத் தெரிவு செய்யப் பட்டுள்ளது.



# சம்மாந்துறையில் பெண்கள் கல்லூரிக்கு உதவும் கிழக்கு சமூக அபிவிருத்தி சங்கம்

**(எம்.எம்.ஜெஸ்மின்)**

கிழக்கு சமூக அபிவிருத்தி சங்கம் சம்மாந்துறையில் பெண் மாணவிகள் கல்வி பயிலும் அரபுக் கல்லூரி ஒன்றுக்கு உதவும் திட்டம் ஒன்றை அமுல்படுத்தியுள்ளது.

இந்தக் கல்லூரியில் நிலவும் அடிப்படைத் தேவைகளையும் நிலையான நீண்ட கால பயன்பாட்டு மின்சார நிலுவைத் தொகையைத் தீர்ப்பதற்கும் உதவி புரிந்தது. அத்துடன் மாதாந்த பயன்பாட்டு பற்றுச் சீட்டுகளை நிர் வகித்தல் மற்றும் செலுத்தும் பொறுப் பையும் ஏற்றுக்கொண்டது.








# ராஜன் ஜனன் ஞாபகார்த்தக் கிண்ணம் பெற்ற களுதாவளை கெனடி விளையாட்டுக்கழகம்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

48 அணிகள் பங்கேற்ற ராஜன் ஜனன் ஞாபகார்த்த தொடரின் இறுதிப் போட்டியில் வெற்றியீட்டிய களுதாவளை கெனடி விளையாட்டுக்கழகம் சம்பியனானது.

களுதாவளை கெனடி விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற ராஜன் ஜனன் ஞாபகார்த்த கிறிக்கெட் போட்டியில் களுதாவளை கெனடி விளையாட்டுக்கழகம் சம்பியன்களாக தெரிவு செய்யப்பட்டு சம்பியன் கிண்ணத்தையும் 30 ஆயிரம் ரூபா பணப் பரிசையும் பெற்றுக் கொண்டது.எருவில் இட்டி பென்டன்ஸ் விளையாட் டுக் கழகம் இரண்டாம் இடத்தைப் பெற்று வெற்றிக் கிண்ணத்தையும் 20 ஆயிரம் ரூபா பணப் பரிசையும் பெற்றுக் கொண்டது.












## விக்கிலீக்ஸ் - ஜூலியன் அசாஞ்சே விடுதலை!

# மேற்குலகின் அத்துமீறல்களை வெளிப்படுத்திய ஜூலியன் அசாஞ்சே!

***ஊடக கருத்துச் சுதந்திர மீறலா ? அரச ரகசியங்களை காட்டிக் கொடுத்தவரா ?***

■ ஐங்கரன் விக்கினேஸ்வரா

(2012 களில் உலக அரசியலில் அதிர்வை ஏற்படுத்திய ஜூலியன் அசாஞ்சே நாடு கடத்தப்படுகிறாரா எனும் கேள்வி மீண்டும் எழுந்துள்ளது. மேற்குலகின் அட்டூழியங்களையும், அத்துமீறல்களை வெளிப்படுத்தியவர் ஜூலியன் அசாஞ்சே. அவரின் கைதானது, அமெரிக்க அரசின் செயற்பாடு ஊடக கருத்துச் சுதந்திர மீறலாகவும் கருதலாம். ஆயினும் மேற்குலகின் அரச இரகசியங்களை காட்டிக் கொடுத்தவர் என்ற குற்றச்சாட்டும் உள்ளது. சுயாதீன கருத்துச் சுதந்திரம் மறுக்கப்பட்டு, ஜூலியன் அசாஞ்சே விடுதலை ஆகிறார்.)

ஈராக் போரில் பாக்தாத்தில் அமெரிக்கா நடத்திய வான் தாக்குதலில், ராய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்தைச் சேர்ந்த நிருபர் கொல்லப்பட்டது உள்பட பல தகவல்கள் ஜூலியன் அசாஞ்சே (துரடயைn யுளளயபெந) வெளியிட்ட ஆவணங்களில் இருந்தன.

இவற்றில் பல விஷயங்கள் ஆட்சியாளர்களின் அத்துமீறல்களையே வெளிக் கொண்டு வந்தன.

இரகசியம் என்று அரசுகளால் அறிவிக்கப்படும் கோப்புகளிலிருந்து தகவல்களைப் பெற்று வெளியிடும் பத்திரிகையாளர்களின் முயற்சிகளுக்குப் பெரிய தடையாக அமைவது போலியான குற்றச்சாட்டுக்களும் அடக்குமுறைகளுமே.

ஜனநாயக விழுமியங்களுக்கும், அரசமைப்புச் சட்டங்களுக்கும் கூட அப்பாற்பட்டு அரசு எனும் அமைப்பை மோசமாகக் கையாளும் ஆட்சியாளர்களை அம்பலப்படுத்தும் ஊடகர்களுக்கு என்ன வகையான சட்டபூர்வப் பாதுகாப்பு உலகில் உள்ளது ?

### *பாக்தாத்தில்அமெரிக்கா தாக்குதல்!*

அமெரிக்க ராணுவம் ஈராக் மற்றும் ஆப்கானிஸ்தானில் நடத்திய தாக்குதல் தொடர்பான பல ஆவணங்களை விக்கிலீக்ஸ் இணையதளத்தில் கடந்த 2010 ஆம் ஆண்டு வெளியிட்டார் அதன் நிறுவனரான ஜூலியன் அசாஞ்சே. இதனால் உடனடியாக விக்கிலீக்ஸ் மீது குற்ற விசாரணையை அமெரிக்கா தொடங்கியது.

உடனடியாக விக்கிலீக்ஸ் மீது குற்ற விசாரணையை வேறு முனையில் திசை திருப்பி அமெரிக்கா தொடங்கியது.

இங்கிலாந்தில் இருந்த ஜூலியன் அசாஞ்சே மீது பாலியல் குற்றச்சாட்டு சுமத்தி, அவருக்கு கைது வாரன்ட்டை சுவீடன் அரசு மூலம் பிறப்பித்தது. இது அமெரிக்காவுக்கு நாடு கடத்தும் முயற்சி என ஜூலியன் அசாஞ்சே குற்றம்சாட்டினர்.

அமெரிக்க வெளியுறவுத் துறை அலுவலகம் மற்றவர்களுடன் வைத்திருந்த தொடர்பு, மின்னஞ்சல் தொடர்பு அனைத்தையும் அசாஞ்சே பொதுவெளியில் வெளியிட்டார். இதனால் ஜூலியன் அசாஞ்சே அமெரிக்காவுக்கு விசாரணைக்காக நாடு கடத்தப்படலாம் என பிரிட்டன் அரசு முன்பு தெரிவித்திருந்தது.

ஆயினும் இந்த நீண்ட கால வழக்கில் தோல்வியைச் சந்தித்த ஜூலியன் அசாஞ்சே ஜாமீன் விதிமுறைகளை மீறி, லண்டனில் உள்ள ஈக்குவடார் தூதரகத்தில் கடந்த 2012 ஆம் ஆண்டு தஞ்சம் அடைந்தார். 2019 ஆம் ஆண்டு இவருக்கு வழங்கப்பட்ட அடைக்கலத்தை ஈக்குவடார் அரசு வாபஸ் பெற்றது. அதன்பின் ஜூலியன் அசாஞ்சேவை இங்கிலாந்து போலீசார் கைது செய்து லண்டன் சிறையில் அடைத்தனர்.

மேற்குலக அரசுகள் மீது உளவு பார்த்ததாக ஜூலியன் அசாஞ்சே மீது 17 குற்றச்சாட்டுகள் உள்ளதால் அவரை அமெரிக்காவுக்கு நாடு கடத்தும்படி இங் கிலாந்து அதிகாரிகளிடம் அமெரிக்கா கோரிக்கை விடுத்திருந்தது. அமெரிக்க சிறையின் கடுமையான சூழலைச் சந்திப்பது, தன்னை தற்கொலைக்கு தூண்டும் என ஜூலியன் அசாஞ்சே தரப்பில் கூறப்பட்டதால், முதலில் அமெரிக்காவின் கோரிக்கையை லண்டன் நீதிமன்றம் நிராகரித்ததும் அறிந்ததே.

இந்த நிலையில், கடந்தசில மாதங்கள் முன்பாக ஜூலியன் அசாஞ்சே அமெரிக்காவுக்கு விசாரணைக்காக நாடு கடத்தப்பட இருக்கிறார் என்று பிரிட்டன் உள்துறைச் செயலாளர் தெரிவித்திருக்கிறார்.

### *ஆஸ்திரேலியாவில் பிறந்தவர்*

அஸ்திரேலியாவில் பிறந்தவரான அசாஞ்சே லண்டனில் உள்ள ஈக்வடார் நாட்டு தூதரகத்தில் 2012-ல் தஞ்சம் புகுந்த பின், இராணுவ அரச ரகசியங்களை வெளியிட்டார் என்ற குற்றச்சாட்டின்பேரில் முதலில் அவரை சுவீடனிலும் பிறகு அமெரிக்காவிலும் விசாரிக்க முற்பட்டனர். பின்னர், சுவீடன் அரசு தனது வழக்கைக் கைவிட்டுவிட்டது.

ஜூலியன் அசாஞ்சே கொஞ்சம் கொஞ்சமாக செத்துக் கொண்டிருக்கிறார் என்று அவருடைய வழக்குரைஞர் தெரிவித்திருப்பதும், அவருடைய உடல்நலம் குன்றிக் கொண்டேவருவதும் ஜன

தொடர்ச்சி▼




# மேற்குலகின் அத்துமீறல்களை வெளிப்படுத்திய ஜூலியன் அசாஞ்சே!

தொடர்ச்சி▲

நாயகத்துக்காக இப்படிச் செயலாற்றும் விசிலூதிகளின் (ூாளைவடந டீடழறநசள) பாதுகாப்பு தொடர்பாக தீவிரமான கேள்விகளை எழுப்பியுள்ளது. கூடவே நவீன சமூகத்தின் நாகரிக எல்லைகளின் போதாமையையும் இது சுட்டிக்காட்டுகிறது.

### இங்கிலாந்து உயர் பாதுகாப்புச் சிறையில்

இங்கிலாந்தில் உள்ள உயர் பாதுகாப்புச் சிறையில் அடைக்கப்பட்டிருக்கும் அசாஞ்சே தன்னுடைய 'விக்கிலீக்ஸ்' இணையத் தளத்தின் வழி பல நாடுகளின் மோசமான அரசியலாட்டங்களை அம்பலப்படுத்தி உள்ளார். அசாஞ்சே அம்பலப்படுத்திய விவகாரங்கள் 2012 காலகட்டத்தில் உலகெங்கும் பெரும் நாயகப் (ர்நசழ) பிம்பத்தை அவருக்கு உருவாக்கியதும் உண்மையே.

அமெரிக்காவின் முகத்திரையை கிழித்துக் காட்டியதால், உடனடியாக சர்வதேச அழுத்தங்களின் கீழ் கொண்டுவரப்பட்ட அவர், இப்போது பிரிட்டன் சிறையில் அடைக்கப்பட்டிருக்கிறார். தன்னை அமெரிக்கா வசம் ஒப்படைத்துவிடக் கூடாது, அது தன் உயிருக்கு ஆபத்து என்று கோரி நீதிப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கிறார் அசாஞ்சே.

லண்டன் உயர் நீதிமன்றம் இந்த வழக்கை விசாரித்துவந்தது. அமெரிக்க அரசிடம் அசாஞ்சேவை ஒப்படைத்துவிடலாம் என்று ஊகிக்கப்பட்டது.

இந்தத் தீர்ப்புக்கு எதிராக பிரிட்டன் உச்ச நீதிமன்றத்தில் அசாஞ்சேவின் வழக்கறிஞர்கள் முறையிட்டனர்.

இதனிடையே கடுமையான உடல் - மன நலப் பாதிப்புக்கு ஆளாகியிருக்கிறார் அசாஞ்சே. மேல்முறையீட்டில் ஒருவேளை தோற்று, அமெரிக்காவுக்கு அசாஞ்சே அனுப்பப்பட்டால், அமெரிக்க சட்ட நடைமுறைகளின்படி 175 ஆண்டுகள் வரை அவர் சிறைத் தண்டனையை அனுபவிக்க நேரிடலாம்.

ஐம்பது வயதாகும் அசாஞ்சேவை அமெரிக்காவுக்கு அனுப்பி வைத்தால் அங்குள்ள சிறைக்கூட நிலைமை காரணமாக அவர் தற்கொலை செய்துகொண்டுவிடுவார். மோசமான நிலையில் அவர் இருக்கிறார் என்று அவருடைய சார்பில் வாதிட்டதை முன்னதாக பிரிட்டனின் கீழமை நீதிமன்றம் ஏற்றதும் குறிப்பிடத்தக்கதாகும்.

### உலக அரசியலில் அதிர்வலைகளை ஏற்படுத்தியவர்

உயர் நீதிமன்றத்தில் இந்த வழக்கு வந்தபோது அமெரிக்க அரசு சார்பில் அளிக்கப்பட்ட உறுதிமொழியை அது ஏற்றது. அசாஞ்சேவை தனிமைச் சிறையிலோ, கொலராடோவில் உள்ள சூப்பர்மேக்ஸ் சிறையிலோ அடைக்க மாட்டோம் என்று அமெரிக்க அரசு உறுதியளித்தது.

அத்துடன் வழக்கு விசாரணைக்குப் பிறகு தண்டனையை அவர் ஆஸ்திரேலிய சிறைகளில்கூட அனுபவிக்கட்டும் என்றும் அமெரிக்க அரசு சார்பில் தெரிவிக்கப்பட்டது.

இதன் விளைவாக அமெரிக்கத் தரப்பை ஏற்றுக் கொண்டது நீதிமன்றம். அமெரிக்க அரசு இன்னமும் துரத்திவருகிறது.

அரச இரகசியம் என்ற சொல்லாடலின் கீழ் எதையெல்லாம் மக்கள் பார்வையிலிருந்து மறைத்து வைக்க முடியும்? காலனிய கால அணுகுமுறையின் நீட்சியாகவும் கடந்துவந்த நூற்றாண்டுகளின் பார்வையையும் இன்னும் எவ்வளவு காலத்துக்குத் தூக்கிச் சுமக்கப்போகிறோம்?

### நீண்ட சட்டப் போராட்டம்

இந்த நீண்ட சட்டப் போராட்டம் நீடித்தால் அது அசாஞ்சேவுக்கும் ஆயுளைப் பாதிக்கும் எனும் அச்சம் இப்போது மேலும் அதிகரிக்கிறது. இது சீக்கிரம் தீர்க்கப்பட வேண்டும்.

முடிவடையாத நீதிமன்ற வழக்குகள் மனதளவில் மிகுந்த மன உளைச்சலை ஏற்படுத்துகின்றன என்று அசாஞ்சேவின் ஆதரவாளர்கள் கூறுகின்றனர்.

உண்மையை வெளிக்கொணர்ந்ததற்காக எதிர்கொள்ளும் சித்திரவதையானது எவரையும் மனச்சிதைவுக்கு ஆளாக்கிவிடும். அசாஞ்சேவுக்கு ஏற்படும் எந்த ஆபத்தும் ஊடக ஜனநாயகத்துக்கான இழிவாகவே அமையும். பத்திரிகையாளராக அவரது பணியைதான் செய்தார். தனது பணியை செய்தற்காக அவர் தண்டனை அனுபவித்து வருகிறார் என்பது கண்கூடு.

ஊடகர்கள் நவீன சமூக முன்னேற்ற செயல் பாட்டின் முக்கியமான அங்கங்கள் ஆவர். அவர்களுடைய உயிர்ப்பான செயல்பாடு ஜனநாயகத்துக்கு முக்கியம். எவ்வாறாயினும் அசாஞ்சே சட்ட ரீதியாக விடுவிக்கப்பட வேண்டும் என்பதே பத்திரிகையாளர்களின் அவாவாகும்.




# சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையில் புதிய வைத்திய அத்தியட்சகருக்கு வரவேற்பு

**(வி.ரி. சகாதேவராஜா)**

சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையின் புதிய வைத்திய அத்தியட்சகர் வைத்திய கலாநிதி டாக்டர் தர்மலிங்கம் பிரபாசங்கருக்கு அங்கு பணிபுரியும் தாதிய உத்தியோகத்தர்கள் பெரு வரவேற்பளித்தனர்.

தாதியர் சங்கப் பிரதிநிதிகளான எஸ்.சந்திரகுமார், எம்.அன்வர், ஏ.பரீஷ், ஏ. றசூல் உள்ளிட்ட தாதிய உத்தியோகத்தர்கள் புதிய வைத்திய அத்தியட்சகர் டாக்டர் பிரபா சங்கருக்கு மாலை சூட்டி வரவேற்றார்கள். இந்த நிகழ்வு வைத்திய சாலையில் நடைபெற்றது.

புதிய வைத்திய அத்தியட்சகர் குறை நிறைகள் தொடர்பாகத் தாதிய உத்தியோகத்தர்களிடம் கேட்டறிந்தார்.

சம்மாந்துறை மண் சார்பில் பொன்னாடை போர்த்தி கௌரவிப்பும் இடம் பெற்றது.

வைத்தியசாலை அபிவிருத்திக் குழுவும் அவரை வாழ்த்தி வரவேற்றது.

காரைதீவைச் சேர்ந்த வைத்திய கலாநிதி டாக்டர் பிரபாசங்கர் முன்னதாக ஆரையம்பதி பிரதேச சுகாதார வைத்திய. அதிகாரியாக கடமையாற்றி இருந்தார்.







# கல்முனையில் கை கழுவுதல் விழிப்புணர்வு வாரம் பிரகடனம்

(றியாஸ் ஆதம்)

கை கழுவுதலின் அவசியத்தை வலியுறுத்தியும் பொது மக்களை விழிப்பூட்டும் நோக்கிலும் நேற்று 24 முதல் 29 ஆம் திகதி வரையான ஒரு வார காலப் பகுதியைப் பிராந்திய கை கழுவுதல் விழிப்புணர்வு வாரமாக கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரகடனப்படுத்தியுள்ளார்.

இதனையடுத்து “கைகளை கழுவுவோம் எங்களை வலுவூட்டுவோம்” எனும் தொனிப்பொருளில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலின் கீழ் கல்முனை பிராந்தியத்தில் பல்வேறு விழிப்புணர்வு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த விழிப்புணர்வு வேலைத் திட்டத்தின் பிரதான நிகழ்வு இன்று (25) கல்முனையில் இடம்பெற்றது. இதன்போது கல்முனை நகரத்தில் உள்ள ஹோட்டல்கள் மற்றும் பொது இடங்களிலும் கை கழுவுதலின் அவசியத்தை வலியுறுத்தி ஸ்ரிக்கர் ஒட்டி காட்சிப்படுத்தப்பட்டது. அது தொடர்பான விழிப்புணர்வு துண்டுப் பிரசுரங்களும் விநியோகிக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸடீன், பிராந்திய சுகாதார சேவைகள் தரம் மற்றும் நோயாளர் பாதுகாப்பு பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் ஏ.எஸ்.எம்.பௌஸாத், பிராந்திய மலேரியா தடுப்புப் பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.எம். நௌஷாத், கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஏ.ஆர். எம்.அஸ்மி, கல்முனை வடக்கு சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் என்.ரமேஷ், மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர் ஐ.எல்.எம்.லபீர், உணவு மற்றும் மருந்துகள் பரிசோதகர் எஸ்.ஜீவராஜா உள்ளிட்ட பொதுச் சுகாதார பரிசோதகர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

கைகளைக் கழுவிச் சுத்தமாக வைத்திருப்பது நோய்த் தடுப்புக்கு ஒரு முக்கிய வழியாகும். இதன் அவசியம் குறித்து மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இந்தக் கை கழுவுதல் விழிப்புணர்வு வாரத்தின் பிரதான நோக்கமாகும்.

# சம்மாந்துறை பிரதேச செயலகத்தில் கை கழுவுதல் விழிப்புணர்வு நிகழ்வு





(சர்ஜுன் லாபீர்)

கை கழுவுதலின் அவசியத்தை வலியுறுத்தியும் பொது மக்களை விழிப்பூட்டும் நோக்கிலும் நேற்று 24 முதல் எதிர்வரும் 29 ஆம் திகதி வரையான ஒரு வார காலப் பகுதியைப் பிராந்திய கை கழுவுதல் விழிப்புணர்வு வாரமாகக் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை பிரகடனம் செய்துள்ளது.

இந்த நிலையில் சம்மாந்துறை பிரதேசத்திலும் பல்வேறு வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அந்த வகையில் சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல். முஹம்மது ஹனீபாவின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலுக்கமைய சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட விழிப்புணர்வு நிகழ்வு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் எஸ்.எல் பிர்தௌஸியாவின் ஒருங்கிணைப்பில் இன்று (25) சம்மாந்துறை பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

சம்மாந்துறை பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளர் யூ.எம். அஸ்லம் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எஸ்.எல். எம் கபீர் கலந்து கொண்டு விழிப்புணர்வுக் கருத்தரங்கை நிகழ்த்தினார்.

இதன்போது சுகாதார வைத்திய அதிகாரி, பொதுச் சுகாதார பரிசோதகர்கள் கை கழுவுதலின் அவசியம் குறித்தும் கை கழுவ வேண்டிய சந்தர்ப்பங்கள் பற்றியும், சுகாதார பழக்க வழக்கங்கள் மற்றும் சுகாதார நடைமுறைகள் சார்ந்த பல்வேறுபட்ட விடயங்களை தெளிவுபடுத்தினர்.

இந்த நிகழ்வில் மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர் எம்.என். எம் பஸ்லான், சுகாதார பரிசோதகர்க ளான எம்.டி நஸார்,எம்.ஐ.எம் ஹனீபா ஆகியோரும் கலந்து கொண்டனர்.



# பொத்துவிலை அடைந்த பாத யாத்திரீகர்கள்; வியாழனன்று உகந்தைமலையை அடைவர்!

**(வி.ரி. சகாதேவராஜா)**

யாழ்ப்பாணம், தொண்டமானாறு, செல்வச்சந்நிதி – கதிர்காமம் பாதயாத்திரை குழுவினர் 50 ஆவது நாளில் பொத்துவிலை அடைந்துள்ளனர்.

யாழ்ப்பாணம், செல்வச் சந்நதி ஆலயத்திலிருந்து கடந்த மே மாதம் 11 ஆம் திகதி புறப்பட்ட ஜெயாவேல்சாமி தலைமையிலான கதிர்காம பாத யாத்திரை குழுவினர் 50 நாள்களாக யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய ஐந்து மாவட்டங்களைக் கடந்து கடந்த 15 ஆம் தேதி சனிக்கிழமை ஆறாவது மாவட்டமான அம்பாறை மாவட்டத்துக்குள் பிரவேசித்தனர்.

இன்று பொத்துவிலை அடைந்த குழுவினர் நாளை பாணமையை அடைந்து சன்னியாசி மலையில் தங்குவர்.

நாளை மறுநாள் 27 ஆம் திகதி வியாழக்கிழமை உகந்தை மலையை அடைய இருக்கின்றார்கள். 30 ஆம் திகதி காட்டுப்பாதை திறக்கப்பட்டதும் முதல் நாள் காட்டுக்குள் பிரவேசிக்க இருக்கின்றனர்.





# நாடாளுமன்ற சபாநாயகர் பதவிக்கு பா.ஜ.க. - காங்கிரஸ் நேரடிப் போட்டி

## நாளை சபையில் வாக்களிப்பு



டெல்லி,ஜூன்25

மக்களவை சபாநாயகர் பதவிக்கு பா.ஜ.க. - காங்கிரஸ் நேரடியாகப் போட்டியிடுகின்றன. சுதந்திரத்திற்கு பிறகு முதல்முறையாக சபாநாயகர் பதவிக்கு தேர்தல் நடைபெறுகின்றது.

நாடாளுமன்ற தேர்தலில் பா.ஜ.க. தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி 293 இடங்களை கைப்பற்றியது. பா.ஜ.க. தனித்து 240 இடங்களை கைப்பற்றியது. எதிர்க்கட்சிகளின் 'இண்டியா' கூட்டணி 234 தொகுதிகளை மட்டுமே கைப்பற்றியது. இதையடுத்து, பிரதமர் மோடி தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி 3 ஆவது முறையாக ஆட்சியமைத்தது.

இதனிடையே, நாடாளுமன்ற மக்களவை சபாநாயகராக யார் நியமிக்கப்படுவார் என்பதில் பரபரப்பு நீடித்து வந்தது. பொதுவாக ஆளும்கட்சி மற்றும் எதிர்க்கட்சி இணைந்து சுமூகமாக மக்களவை சபாநாயகரை தேர்ந்தெடுப்பது வழக்கம். ஆனால், இந்த முறை பா.ஜ.க. - காங்கிரஸ் இடையே சபாநாயகரை தேர்ந்தெடுப்பதில் போட்டி ஏற்பட்டுள்ளது.

நாடாளுமன்ற மக்களவை சபாநாயகராக ஓம் பிர்லாவை நியமிக்க ஆதரவு தரவேண்டுமென காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகளிடம் பா.ஜ.க. கோரிக்கை விடுத்தது. ஆனால், துணை சபாநாயகர் பதவியை எதிர்க்கட்சிக்கு வழங்கினால் சபாநாயகராக ஓம் பிர்லாவை நியமிக்க ஆதரவு தருவோம் என காங்கிரஸ் தலைமையிலான எதிர்க்கட்சிகளின் 'இண்டியா' கூட்டணி நிபந்தனை விதித்தது. இந்த நிபந்தனையை பா.ஜ.க. ஏற்றுக்கொள்ளவில்லை. மேலும், சபாநாயகர் பதவிக்கு போட்டியிட பா.ஜ.க. சார்பில் ஓம் பிர்லா வேட்பு மனு தாக்கல் செய்தார்.

இந்நிலையில், பா.ஜ.கவுக்கு எதிராக சபாநாயகர் தேர்தலில் இந்தியா கூட்டணி சார்பில் காங்கிரஸ் வேட்பாளரை நிறுத்தியுள்ளது. கேரளாவை சேர்ந்த காங்கிரஸ் எம்.பி.யான கொடிக்குனில் சுரேஷ் வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ளார்.

நாடாளுமன்ற மக்களவை சபாநாயகர் தேர்தலில் போட்டியிட சுரேஷ் இன்று வேட்புமனு தாக்கல் செய்துள்ளார். 12 மணியுடன் வேட்புமனு தாக்கல் நிறைவடைந்த நிலையில் 11.50 மணியளவில் சுரேஷ் தனது வேட்பு மனுவை தாக்கல் செய்தார்.

சுதந்திர இந்தியாவின் நாடாளுமன்ற வரலாற்றில் சபாநாயகர் பதவிக்கு தேர்தல் நடத்தப்படுவது இதுவே முதல் முறையாகும். சபாநாயகர் பதவிக்கு பா.ஜ.க. - காங்கிரஸ் வேட்பாளர்களை நிறுத்தியுள்ளது. தேர்தல் நாளை நடைபெற உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# போதைப்பொருள்கள் நிறைந்த மாநிலமாக தமிழகம் மாறியுள்ளது

## எடப்பாடி பழனிசாமி குற்றச்சாட்டு



சென்னை,ஜூன்25

கள்ளக்குறிச்சி விஷ சாராய மரணம் மிக மோசமானது என எதிர்க்கட்சித்தலைவர் எடப்பாடி பழனிசாமி கூறினார்.

விஷ சாராய விவகாரம் தொடர்பாக சட்டசபையில் அமளியில் ஈடுபட்ட அ.தி.மு.கவினர், தொடர்ந்து வெளிநடப்பு செய்தனர். இதனைத் தொடர்ந்து, கிண்டியில் உள்ள கவர்னர் மாளிகையில் எடப்பாடி பழனிசாமி தலைமையில் அ.தி.மு. கழக எம்.எல்.ஏ.க்கள் மற்றும் எம். பி.க்கள் இன்று கவர்னரை சந்தித்து கள்ளச்சாராயம் விவகாரம் தொடர்பாக மனு அளித்தனர். அப்போது சி.பி.ஐ. விசாரணைக்கு உத்தரவிட நடவடிக்கை எடுக்குமாறு கவர்னர் ஆர்.என்.ரவியிடம் அ.தி.மு.க. தரப்பில் வலியுறுத்தப்பட்டது.

இதன்பின் செய்தியாளர்களை சந்தித்த எடப்பாடி பழனிசாமி கூறியதாவது:-

கள்ளக்குறிச்சி விஷ சாராய மரணம் மிக மோசமானது. ஆளுங்கட்சியினர் ஆதரவு இல்லாமல் கள்ளச்சாராயம் விற்பனை நடைபெற வாய்ப்பு இல்லை. மரக்காணம் கள்ளச்சாராய வழக்கை சி.பி.சி.ஐ.டி. விசாரித்தது. அது பலனளிக்கவில்லை. தற்போது நடைபெறும் கள்ளச்சாராய ரெய்டுகளை முன்கூட்டியே செய்திருக்கலாம். வனத்துறை அதிகாரிகளிடமும் விசாரணை நடத்த வேண்டும். வனத்துறை அதிகாரிகளுக்கு தெரியாமல் கள்ளச்சாராயம் காய்ச்ச வாய்ப்பு இல்லை.

ஒரு நபர் விசாரணை ஆணையம் மூலம் நியாயம் கிடைப்பது சந்தேகம் தான். உளவுத்துறை தோல்வி அடைந்து விட்டதா? போதைப்பொருள்கள் நிறைந்த மாநிலமாக தமிழகம் மாறியுள்ளது. மாநில பொலிஸார் விசாரித்தால் நியாயம் கிடைக்காது.

கள்ளக்குறிச்சி சம்பவத்திற்கு பொறுப்பேற்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ராஜினாமா செய்ய வேண்டும். கள்ளச்சாராயச் சம்ப வத்தை சி.பி.ஐ. விசாரிக்க வேண்டும். சி.பி.ஐ. விசாரித்தால் மட்டுமே நியாய மாக விசாரணை நடைபெறும்." - இவ்வாறு அவர் பேசினார்.




# இங்கிலாந்தில் விடுதலையான அசாஞ்சே அமெரிக்கா புறப்பாடு

## நாளை அங்கு நீதிமன்றத்தில் முன்னிலையாவார் குற்றத்தை ஒப்புக்கொண்டு விடுவிப்புப் பெறுவார்

இங்கிலாந்து சிறையில் இருந்து ஜூலியன் அசாஞ்சே விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

விக்கி லீக்ஸ் நிறுவன தலைவர் ஜூலியன் அசாஞ்சே. இவர் ஆப்கானிஸ்தான், ஈராக் போன்ற நாடுகளில் அமெரிக்கா நடத்திய போர் குற்றங்கள், மனித உரிமை மீறல்கள், ஊழல் தொடர்பான ரகசிய ஆவணங்களை ஹக் செய்து விக்கிலீக்ஸ் இணைய தளத்தில் வெளியிட்டார். இந்தச் சம்பவம் உலக அளவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. இதை யடுத்து, ஜூலியன் அசாஞ்சேவை தேடப்படும் குற்றவாளியாக அமெரிக்கா அறிவித்தது.

இந்த விவகாரத்தில் அமெரிக்கா கொடுத்த நெருக்கடிகளின் காரணமாக இங்கிலாந்தில் உள்ள ஈகுவடார் தூதரகத்தில் தஞ்சம் அடைந்த அசாஞ்சே, கடந்த 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் கைது செய்யப்பட்டார். பின்னர் அவர் லண்டனில் உள்ள சிறையில் அடைக்கப்பட்டார். உளவுக் குற்றச்சாட்டை எதிர்கொண்டுள்ள ஜூலியன் அசாஞ்சேவை அமெரிக்காவிற்கு கொண்டு வரும் சட்ட நடவடிக் கைகளை அந்நாட்டு அரசு தொடங்கியது.

இதையடுத்து, ஜூலியன் அசாஞ்சேவை அமெரிக்காவிற்கு நாடு கடத்தும்படி இங்கிலாந்து அரசு 2022 ஆம் ஆண்டு ஜூன் மாதம் உத்தரவிட்டது. அமெரிக்காவுக்கு நாடு கடத்தப்படுவதை எதிர்த்து அசாஞ்சே இங்கிலாந்து நீதிமன்றத்தில் முறையீடு செய்தார். இந்த வழக்கு விசாரணை இங்கிலாந்து நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது.

இந்நிலையில், இங்கிலாந்து சிறையில் இருந்து ஜூலியன் அசாஞ்சே இன்று விடுதலை செய்யப்பட்டுள்ளார். அமெரிக்க இராணுவஈரகசிய ஆவணங்களை விக்கி லீக்சில் வெளியிட்ட குற்றத்தை ஒப்புக்கொள்கின்றார் என ஜூலியன் அசாஞ்சே தெரிவித்தார். இந்த வழக்குத் தொடர்பாக அமெரிக்காவில் ஆஜராகவும் ஒப்புக்கொண்டார். அமெரிக்காவின் மெரினா தீவில் உள்ள நீதிமன்றத்தில் ஆஜராக உள்ளார்.

இங்கிலாந்து சிறையில் இருந்த அசாஞ்சே, அமெரிக்காவின் நீதித்துறையுடன் ஒப்பந்தம் செய்து கொண்டார். ஒப்பந்தப்படி, அமெரிக் கிராணுவ ரகசியங்களை வெளியிட்ட குற்றத்தை அசாஞ்சே ஒப்புக்கொண்டு நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டும். இந்த குற்றத்திற்கு 62 மாதங்கள் (1,860 நாள்கள்) சிறைத் தண்டனை விதிக்கப்படும். ஆனால், அசாஞ்சே ஏற்கனவே 1,901 நாள்கள் இங்கிலாந்து சிறையில் இருந்துள்ளார். இதனால்,! ராணுவ ரகசியங்களை வெளியிட்ட குற்றத்தை ஒப்புக்கொண்டாலும் அதற்கான தண்டனையை ஏற்கனவே இங்கிலாந்து சிறையில் அனுபவித் ததால் விடுதலை செய்ய வேண்டும் என அமெரிக்க நீதித்துறையிடம் ஒப்பந்தம் செய்யப்பட்டது.

அந்த ஒப்பந்தத்திற்கு அமெரிக்க நீதித்துறை சம்மதம் தெரிவித்ததையடுத்து இங்கிலாந்து சிறையில் இருந்து அசாஞ்சே இன்று விடுதலை செய்யப்பட்டார்.

இதையடுத்து, இங்கிலாந்தில் இருந்து அசாஞ்சே விமானம் மூலம் அமெரிக்காவுக்கு புறப்பட்டு சென்றார். அவர் நாளை அமெரிக்காவின் மெரினா தீவில் உள்ள நீதிமன்றத்தில் ஆஜராக உள்ளார். அமெரிக்க இராணுவம் குறித்தஈரகசிய ஆவணங்களை வெளியிட்ட குற்றத்தை அவர் ஒப்புக் கொள்ளார். பின்னர், ஏற்கனவே இங்கிலாந்தில் சிறை தண்டனை அனுபவித்ததையடுத்து ஒப்பந்தப்படி அவரை அமெரிக்க நீதிமன்றம் வழக்கில் இருந்து விடுதலை செய்ய உள்ளது. இதனை தொடர்ந்து ஜூலியன் அசாஞ்சே தனது சொந்த நாடான ஆஸ்திரேலியா செல்ல உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.



பக்கங்கள் - 6
கனடா முரசு
செவ்வாய்க்கிழமை 25/06/2024

## மேலும் வட்டி வீதம் குறையும் சாத்தியம்?

மே மாத பணவீக்க புள்ளிவிவரங்களை கனடா வங்கி (பாங்க் ஒவ் கனடா) இந்த வாரம் ஆய்வு செய்கிறது. அது மீண்டும் வட்டி விகிதக் குறைப்புகளை வழங்க முடியுமா என்பதையும் அளவிடுகிறது C2

# இடைத்தேர்தலில் ட்ரூடோவின் கட்சி தோல்வி
# கடும் போட்டிக்கு மத்தியில் எதிரணிக்கு வெற்றி

Toronto—St. Paul's

| Party | Candidate | Votes | Percent |
|---|---|---|---|
| Conservative | Don Stewart | 15,555 | 42.1 % |
| Liberal | Leslie Church | 14,965 | 40.5 % |
| NDP-New Democratic Party | Amrit Parhar | 4,044 | 10.9 % |
| Green Party | Christian Cullis | 1,059 | 2.9 % |
| People's Party - PPC | Dennis Wilson | 234 | 0.6 % |
| Independent | Jonathan Schachter | 97 | 0.3 % |
| Independent | Mário Stocco | 82 | 0.2 % |
| Marxist-Leninist | Meñico Turcotte | 57 | 0.2 % |
| Parti Rhinocéros Party | Sean Carson | 51 | 0.1 % |



இது வரை ஆளும் லிபரல் கட்சியின் கோட்டையாக இருந்து வரும் ரொறன்ரோ சென்ட் போல்ஸ் தொகுதியில் நேற்று நடந்த இடைத் தேர்தல் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவின் தலைமையிலான லிபரல் C5




# இலங்கையில் வடக்கு தொழில்துறை மன்றத்துடன் கனேடியத் தமிழர் பேரவை புரிந்துணர்வு ஒப்பந்தம்

## வட பிராந்திய உள்ளூர் தயாரிப்புகள் கனேடிய சந்தைக்கு அறிமுகமாகும்

கனேடியத் தமிழர் பேரவை (CTC) உள்ளூர் தயாரிப்புகளை மேம்படுத்துவதற்காக இலங்கையில் வடக்கு தொழில்துறை மன்றத்துடன் (NCI) புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத் திட்டுள்ளது.

இது தொடர்பில் கனேடிய தமிழர் பேரவை தெரிவித்திருப்பவை வருமாறு:-

கனேடிய தமிழர் பேரவை (CTC) வடக்கு கைத்தொழில் சம்மேளனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றை கைச்சாத்திட்டுள்ளதை அறிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறது. C2

# கனடாவில் குடியேறுவோர் எதிர்கொள்ளும் சவால்கள்

கனடாவில் புதிதாக குடியேறும் வெளிநாட்டுப் பிரஜைகள் சவால்களை எதிர்நோக்க நேரிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக வாகனக் காப்புறுதிக் கட்டணங்கள் அதிகமாக செலுத்த நேரிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சிலர் மாதம் ஒன்றிற்கான வாகன காப்புறுதி கட்டணமாக 300 முதல் 450 டொலர்கள் வரையில் செலுத்த நேரிடுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கனடாவிற்குள் புததாக குடியேறும் வெளிநாட்டு பிரஜைகள் இவ்வாறு வாகனங்களை செலுத்துவதற்காக C2



### இருவர் உயிரைப் பறித்து 14 பேரைக் காயமடைய வைத்த

# எட்டோபிகோக்கில் சூட்டுச் சம்பவம்: 14 வயதுச் சிறுவன் மீது குற்றச்சாட்டு


உயிரிழந்த இருவர்




இந்த மாத தொடக்கத்தில் எட்டோபிகோக்கில் உள்ள ஒரு பள்ளிக்கு வெளியே இரண்டு ஆண்களின் உயிரைப் பறித்தது மற்றும் மேலும் மூன்று பேர் காயமடைய வைத்த கண்மூடித்தனமான துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பாக 14 வயது சிறுவன் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது,

கடந்த ஜுன் 2 அன்று, இரவு 11 மணியளவில் ஃபின்ச் அவென்யூ வெஸ்ட் மற்றும் கிப்லிங் அவென்யூவிற்கு அருகில் உள்ள நார்த் அல்பியன் காலேஜியேட் இன்ஸ்டிடியூட்டில் கால்பந்து விளையாட்டைத் தொடர்ந்து ஆண்கள் குழு ஒன்று கூடியது. அச்சமயம் குறைந்தது இரண்டு சந்தேக நபர்கள் வாகனத்தில் இருந்து கண் மூடித்தனமாகச் சுட்டனர்.

மேபிளைச் சேர்ந்த டெல்ராய் ஜார்ஜ்" பார்க்ஸ், 61, சிறிது நேரம் கழித்து இறந்தார், அதே நேரத்தில் காயங்களுக்கு ஆளான 46 வயதான டொராண்டோவில் வசிக்கும் சீமோர் கிப்ஸ் ஜுன் 5 அன்று உயிரிழந்தார்.

துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த மற்ற மூன்று ஆண்களில், ஒருவர் "மிகவும் தீவிரமான நிலையில்" இருக்கின்றார் எனவும், அவர் "வாழ்நாள் முழுவதும் நெருக்கடிகளைச் சந்திக்கும்" காயங்களை எதிர் கொள்கின்றார் எனவும் கூறப்பட்டது. பாதிக்கப்பட்டவர்களின் மனக் காயங்களும் ஆழமானவை என்றும் கூறப்பட்டது.

---

**இலங்கையில் வடக்கு...**

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்த மூலோபாய கூட்டாண்மையானது இலங்கையில் இருந்து, குறிப்பாக போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு பிராந்தியங்களில் இருந்து, உள்ளூர் தயாரிப்புகளை ஊக்குவித்து, கனேடிய சந்தைக்கு அறிமுகப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

இந்த ஆண்டு தொடக்கத்தில் CTC இன் பிரதிநிதிகள் இலங்கைக்கு விஜயம் செய்த போது இந்த முயற்சிக்கான அடித்தளம் போடப்பட்டது. இந்த விஜயத்தின் போது, உள்ளூர் உற்பத்தியாளர்களை ஆதரிப்பதை நோக்கமாகக் கொண்ட சாத்தியமான கூட்டாண்மை பற்றி தெரிந்துகொள்ள வடக்கு தொழில்துறையின் பிரதிநிதிகளை நாங்கள் சந்தித்திருந்தோம். அதன் அடுத்தகட்டமாகவே இந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் கீழ், CTC உள்ளூர் தயாரிப்புகளை கனடாவில் அதன் பல்வேறு நிகழ்வுகள் மூலம் ஊக்குவிக்க முன்வந்துள்ளது. இதில் மிகப்பெரிய வருடாந்திர தெருத்திருவிழாவான தமிழர் தெருவிழாவும் அடங்கும். தமிழ் சமூகம் மற்றும் கனடாவில் உள்ள பரந்த பொதுமக்களுக்கு எம் தாயக தயாரிப்புகளை முன்னிலைப்படுத்தவும் சந்தைப்படுத்தவும் CTC அதன் தளங்களையும் வளங்களையும் முழுமையாக பயன்படுத்தவுள்ளது.

இம்முயற்சியானது தாயக தயாரிப்புகளுக்கு பரந்த சந்தையை உருவாக்குவது மட்டுமன்றி போரினால் பாதிக்கப்பட்ட இந்தப் பிரதேசங்களின் நிலையான அபிவிருத்திக்கும் பங்களிக்கும் என CTC நம்புகிறது. இந்த தயாரிப்புகளை உலக சந்தையில் அறிமுகப்படுத்துவதன் மூலம், வடக்கில் பொருளாதார வளர்ச்சி மற்றும் ஸ்திரத்தன்மையை வளர்ப்பதை CTC நோக்கமாகக் கொண்டுள்ளது. இது உள்ளூர் தொழில்கள் மற்றும் சமூகங்களுக்கு மிகவும் தேவையான ஊக்கத்தை அளிக்கும்.

இந்த முயற்சியை நேரடியாக அனுபவிப்பதற்கும் ஆதரவளிப்பதற்கும், ஓகஸ்ட் 24 மற்றும் 25 ஆம் திகதிகளில் மார்க்கம் வீதியில் இடம்பெறவுள்ள தமிழர் தெருவிழாவுக்கு வருகை தருமாறு அன்போடு அனைவரையும் அழைக்கின்றோம். தாயகத்தில் இருந்து நம்மூர் தயாரிப்புக்களைப் பற்றி மேலும் அறிந்து கொள்ளவும், போரினால் பாதிக்கப்பட்ட பகுதிகளின் பொருளாதார மறுமலர்ச்சிக்கு ஆதரவளிக்கவும் இது ஒரு தனித்துவமான வாய்ப்பாகும்.

இந்த புரிந்துணர்வு உடன்படிக்கையானது தமிழ் சமூகத்திற்கு உள்நாட்டிலும் சர்வதேச அளவிலும் ஆதரவளிப்பதற்கான CTC இன் அர்ப்பணிப்பை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது. - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

**கனடாவில்...**

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கூடுதல் தொகையை செலுத்த நேரிடுவதாக விசனம் வெளியிட்டுள்ளனர்.

கனடாவில் வாகனம் செலுத்துவது தொடர்பிலான அனுபவத்தின் அடிப்படையில் இந்தக் கட்டணங்கள் அளவீடு செய்யப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சிலர் நீண்ட நாள்களாக சொந்த நாடுகளில் வாகன ஓட்டுனர் உரிமம் பெற்றுக்கொண்டவர்கள் எனவும், எவ்விதமான மோட்டார் போக்குவரத்து தவறுகளும் இழைக்காதவர்கள் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

எனினும் கனடாவில் புதிதாக வாகனம் செலுத்துவதனை மட்டும் அடிப்படையாகக் கொண்டு கூடுதல் தொகை காப்புறுதி கட்டணம் அறவீடு செய்யப்படுகின்றது என கனடாவில் வசித்து வரும் வெளிநாட்டு குடியேறிகள் தெரிவித்துள்ளனர்.

கனடிய பிரஜைகளும் குடியேறிகளும் வெவ்வேறு விதமாக நடத்தப்படுகின்றனர் என அவர்கள் வருத்தம் வெளியிட்டுள்ளனர்.

---

**மேலும் வட்டி...**

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

எனக் கூறப்பட்டது.

மே மாதத்திற்கான வருடாந்திர பணவீக்க விகிதத்தை இன்று செவ்வாய்க்கிழமை கனடா புள்ளிவிவரங்கள் அமைப்பு வெளியிட உள்ளது.

இந்த ஆண்டு பணவீக்கம் தொடர்ந்து தணியும் அறிகுறிகளைக் காட்டுகிறது. கடைசியாக ஏப்ரல் மாதத்தில் 2.7 சதவீதமாக இருந்தது.

அந்தத் தணியும் விலை அழுத்தங்கள், பாங்க் ஒவ் கனடா பணவியல் கொள்கையில் ஒரு பெரிய மாற்றத்தை ஏற்படுத்த அனுமதித்துள்ளது. இந்த மாத தொடக்கத்தில் அதன் குறியீட்டு வட்டி விகிதத்தை கால் சதவிகிதம் குறைத்தது.

மத்திய வங்கி, அதன் முக்கிய வட்டி விகிதத்தைப் பயன்படுத்தி கனடாவில் பரந்த அளவில் கடன் வாங்குவதற்கான செலவை நிர்ணயிக்கிறது. பணவீக்கத்தை அதன் இரண்டு சதவீத இலக்கிற்கு மீட்டெடுக்கும் முயற்சியில் கொள்கை விகிதத்தை எளிதாக்குகிறது அல்லது இறுக்குகிறது.

சில பொருளாதார வல்லுநர்கள் மே மாத புள்ளிவிவரங்கள் பணவீக்க விடயத்தில் தொடர்ந்து முன்னேற்றத்தைக் காண்பிக்கும் என்று எதிர்பார்க்கிறார்கள்.




# பட்டப்பின் படிப்புக்கான பணி அனுமதியை இனி கனடிய - அமெரிக்க எல்லையில் பெறமுடியாது!



கனடாவில் பணி அனுமதி பெறுவது தொடர்பில் புதிய நடைமுறை அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

வெளிநாட்டு பிரஜைகள் பட்டப்பின் படிப்பு தொடர்பான பணி அனுமதியை கனடிய - அமெரிக்க எல்லை பகுதியில் பெற்றுக் கொள்ள இனி அனுமதி வழங்கப்படாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மாற்றங்கள் ஜூன் 21 முதல் அமலுக்கு வந்தன.

கனடாவில் குடிவரவு, அகதிகள் மற்றும் குடியுரிமை அமைச்சர் மார்க் மில்லர் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

சில வெளிநாட்டு பிரஜைகள் மோசடியான முறையில் பணி அனுமதியை பெற்றுக் கொள்ள முயற்சிக்கின்றனர் எனக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

கனடாவில் தற்காலிகமாக தங்கி இருக்கும் நபர் ஒருவர் பணி அனுமதி பெற்றுக் கொள்வதற்கு குறுக்கு வழிகளை பயன்படுத்துவதைத் தடுக்கும் நோக்கில் இந்தப் புதிய தடை நடைமுறைக்கு வர உள்ளது.

தற்காலிகமாக கனடாவில் வசிப்பவர்கள் மாணவர் அனுமதி கல்வி அனுமதி அல்லது பணி செய்வதற்கான அனுமதிக்காக இணையத்தில் விண்ணப்பம் செய்யும் போது ஏற்படக்கூடிய கால தாமதத்தை தவிர்க்கும் நோக்கில் நாட்டை விட்டு வெளியேறி பின்னர் இவ்வாறு விண்ணப்பம் செய்கின்றனர்.

இது குடிவரவு நடைமுறைகளைப் பிழையாக பயன்படுத்தும் ஓர் செயல்முறை என அமைச்சர் மார்க் மில்லர் தெரிவித்துள்ளார்.

எனவே இந்தச் சிக்கலைத் தவிர்க்கும் நோக்கில் எல்லை பகுதியில் பணி செய்வதற்கான அனுமதி கோரி விண்ணப்பிப்பதனை ரத்து செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நாட்டின் குடிவரவு திட்டத்தின் நேர்மை தன்மையை உறுதி செய்யும் நோக்குடன் அந்தத் தடை நடைமுறை மேற்கொள்ளப்படுவதாகவும் அறிவிக்கப்பட்டது.

குடயபிழடபை-ஐ தவிர்ப்பதற்காகவே விமான நிலையத்தில் வெளிநாட்டவர்களுக்கு PG work permit விண்ணப்பம் வழங்குவதை கனடா நிறுத்தியுள்ளது என்று விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

வேலை மற்றும் நிரந்தர வதிவிடத்தை நாடும் சர்வதேச மாணவர்களுக்கு முதுநிலைப் பட்டதாரி பணிக்கான அனுமதி (PGWP) முக்கியமானது.

கனடாவில் 2023-ஆம் ஆண்டில் PGWP விண்ணப்பங்கள் 214 சதவீதம் உயர்ந்துள்ளன. இது வெளிநாட்டவர்களின் வேலை மற்றும் வதிவிடத்திற்கான அதிக தேவையைப் பிரதிபலிக்கிறது.

இந்நிலையில், கனடாவின் குடிவரவு, அகதிகள் மற்றும் குடியுரிமை அமைச்சர் மார்க் மில்லர்,

குடயபிழடபை-ஐ குறிவைத்து இந்த முடிவானது எடுக்கப்பட்டுள்ளது.

குடயபிழடபை என்பது, ஏற்கனவே கனடாவில் இருக்கும் ஒரு வெளிநாட்டவர் கனடாவை விட்டு சொந்த நாட்டிற்கு வெளியேறாமலேயே, கனேடிய விமான நிலையங்களில் எளிதாக PGWP க்கு விண்ணப்பித்து, புதுப்பிக்கப்பட்ட படிப்பு அல்லது பணி அனுமதி போன்ற புதிய தற்காலிக வதிவிட நிலையைப் பெறுவதைக் குறிக்கிறது.

கனடாவில் வசிக்கும் தற்காலிக குடியிருப்பாளர்கள், வேலை அல்லது படிப்பு அனுமதிக்கான சாதாரண காத்திருப்பு நேரத்தைத் தவிர்க்க இந்த குடயபிழடபை-ஐ பயன்படுத்துகின்றனர்.

குடயபிழடபை என்பது சட்டப்பூர்வ நடைமுறையாகும், ஆனால் அதிகாரிகள் குடியேற்றப் பணியில் ஈடுபடுவதால், எல்லையில் குறிப்பிடத்தக்க சிரமன்ச்களை எடுத்துக்கொள்வது அதிகரித்துள்ளது.

இந்நிலையில், கனடாவின் இந்த நடவடிக்கையானது பயணிகளுக்கான தாமதத்தை குறைக்கும் மற்றும் கனடாவிற்கும் அமெரிக்காவிற்கும் இடையிலான வணிகப் பொருள்களின் இயக்கத்தை விரைவுபடுத்தும் என்று எதிர்பார்க்கப்படுவதாக குடிவரவு அகதிகள் மற்றும் குடியுரிமை கனடா அறிவித்துள்ளது.



# அடுத்த ஐம்பது ஆண்டுகளில் கனடாவில் வயோதிபர் எண்ணிக்கை 3 மடங்காகும்!

## கனடா புள்ளிவிவர அமைப்பு எதிர்வு கூறல்

கனடா புள்ளிவிவர அமைப்பின் புதிய கணிப்புகளின்படி இன்னும் ஐம்பது ஆண்டுகளில் – 2073 ஆம் ஆண்டளவில் – நாட்டின் மக்கள்தொகை 63 மில்லியனை எட்டும். 85 அல்லது அதற்கு மேற்பட்ட வயதுடையவர்களின் எண்ணிக்கை தற்போதுள்ளதை விட மூன்று மடங்காக உயரும்.

இப்போதைய சூழ்நிலைகளில் மக்கள் குடியேற்றம் மக்கள்தொகை அதிகரிப்புக்கு முக்கிய காரணியாக இருக்கும் என்று நிறுவனம் கூறுகிறது.

அதே நேரத்தில் கருவுறுதல் விகிதங்கள் குறைவாக இருப்பதால் மக்கள் தொகையின் இயற்கை வளர்ச்சியில் அதன் பங்களிப்பு ஒரு சிறு அளவாக மட்டுமே இருக்கும் என்றும் கூறப்பட்டது.

2023 இல் மக்கள் தொகை சுமார் 40 மில்லியனிலிருந்து அடுத்த அரை நூற்றாண்டில் 47 மில்லியனிலிருந்து 87 மில்லியனாக உயரும். 63 மில்லியன் நடுத்தர வளர்ச்சி முன்னறிவிப்பாக இருக்கும்.

85 மற்றும் அதற்கு மேற்பட்ட வயதினரின் மக்கள் தொகை 2023 இல் 896,600 பேர். இது, 2073 இல் 3.3 மில்லியனிலிருந்து 4.3 மில்லியனாக அதிகரிக்கும்.

நியூஃபவுண்ட்லேண்ட் மற்றும் லாப்ரடோர், நோவா ஸ்கோடியா, நியூ பிரன்சுவிக் மற்றும் கியூபெக் ஆகியவற்றின் மக்கள்தொகை 2048 ஆம் ஆண்டு வரை கனடாவின் மொத்த மக்கள்தொகையின் விகிதமாக குறையும் என்று நிறுவனம் கணித்துள்ளது.

இதற்கிடையில் சஸ்காட்செவன், ஆல்பர்ட்டா மற்றும் பிரிட்டிஷ் கொலம்பியா ஆகியவை நாட்டின் மக்கள் தொகையில் தங்கள் பங்கை அதிகரிக்கும் என்றும் கனடா புள்ளிவிவர அமைப்பு கணித்துள்ளது.





# தென்மேற்கு ஒன்றாறியோவில் ஹரோப் பகுதியில் வீடொன்றில் சடலமாக மீட்கப்பட்ட நால்வருக்கு உருக்கமான நினைவஞ்சலி

ஒன்றாரியோ மாகாணத்தில் சடலமாக மீட்கப்பட்ட நான்கு பேருக்கு அந்தப் பகுதியைச் சேர்ந்த மக்கள் உருக்கமான இரங்கல்களை வெளியிட்டுள்ளனர்.

தென்மேற்கு ஒன்றாறியோவில் வின்ஸருக்குத் தெற்கே ஹரோ பகுதியில் அமைந்துள்ள வீடு ஒன்றில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 4 பேர் உயிரிழந்திருந்தனர்.

இந்த சம்பவத்தில் சடலமாக மீட்கப்பட்ட பெண்மணி சமூக சிந்தனை கொண்ட ஒரு யுவதி எனப் புகழாரம் சூட்டப்பட்டுள்ளது.

தனது சமூகத்திற்காக அயராது உழைத்து, தன்னலமற்ற அடிப்படையில் செயற்பட்டவர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர் ஓர் கரிசனையுடைய தாய் என நினைவஞ்சலியில் பங்கேற்றவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தப் பெண்ணின் இழப்பு சமூகத்திற்கு ஓர் பாதிப்பு என அவரது தோழியான ட்ரீனா அப்கட் தெரிவித்துள்ளார்.

உயிரிழந்த பெண்ணின் மகனும் மகளும் சிறந்த நற்பண்புகளை கொண்டவர்கள் எனவும் அனைவருடனும் நட்புறவாடக் கூடியவர்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மரணங்களுக்கான காரணம் பற்றியோ உயிரிழந்தவர்களின் ஆள் அடையாள விவரங்கள் பற்றியோ பொலிஸார் இதுவரை தகவல்களை வெளியிடவில்லை.

விசாரணைகள் ஆரம்ப கட்டத்தில் இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## இடைத்தேர்தலில்...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கட்சி அதிர்ச்சித் தோல்வியை அடைந்தது. சொற்ப வாக்குகள் வித்தியாசத்தில் கன்சர்வேட்டிவ் கட்சி வென்றது.

இந்த இடைத்தேர்தல் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவின் தலைமையிலான லிபரல் கட்சி அரசுக்குசோதனைக் களமாக மாறிவிட்டது.

வாக்கு எண்ணிக்கையின் ஆரமம் பத்திலிருந்தே லிபரல் கட்சியும் கன்சர்வேட்டிவ் கட்சியும் ஒன்றை ஒன்று முந்தும் நிலையில் முட்டி மோதிக் கொண்டு நின்றன.

இறுதியில் கன்சர்வேட்டிவ் வேட்பாளர் டொன் ஸ்டுவார்ட் 15,555 வாக்குகள் (42.1 வீதம்) பெற்று வென்றார்.

ஆளும் லிபரல் கட்சியின் வேட்பாளர் லெஸ்லி சேர்ச் 14,965 வாக்குகள் (40.5 வீதம்) பெற்றுத் தோல்வியடைந்தார்.

இந்தத் தேர்தலில் போட்டியிட்ட 84 வேட்பாளர்களில் 8 பேரைத் தவிர எஞ்சியோர் 50க்கும் குறைவான வாக்குகளையே பெற்றனர்.

லிபரல் கட்சியின் ஆட்சிக்கு எதிராக வளர்ந்து வரும் அரசியல் அதிருப்தி, இந்த ஒன்றாறியோ இடைத்தேர்தலில் கன்சர்வேடிவ் முன்னேற்றத்திற்கு வழிவகுத்தது எனக் கருதப்படுகின்றது.

இந்த இடைத்தேர்தல் முடிவுகள் எதிர் வரும் ஆண்டு நடைபெறவுள்ள பொது தேர்தல் முடிவுகளின் பிரதிபலிப்பாக கருதப்பட முடியும் என பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தாமே ஏற்கனவே சுட்டிக்காட்டி இருந்தார் என்பதும் கவனிக்கத் தக்கது.

இடைத்தேர்தல முடிவுகள் மக்களின் மெய்யான பிரதிபலிப்பாக அமையும் என பிரதமரே தெரிவித்திருந்தார்.

சென் போஸ் தொகுதி நீண்ட காலமாக லிபரல் கட்சியின் ஆதிக்கத்தில் காணப்பட்டது.

அத்தொகுதியை கடந்த முப்பது ஆண்டுகளுக்கு மேல் ஒன்பது தேர்தல்களில் தொடர்ச்சியாக வென்று பிரதிநிதித்துவம் செய்து வந்த கரோலின் பென்னட் அம்மையார் இராஜினாமாச் செய்தமையால் இப்போது இந்த இடைத் தேர்தல் நடைபெற்றது.

எவ்வாறெனினும், ஜிளழள நிறுவனம் தேர்தலுக்கு முன்னர் நடத்திய கருத்துக்கணிப்பில் எதிரணியான கன்சர்வேட்டிவ் கட்சி 42 வீதமான வாக்குகளைப் பெற்றுக் கொள்ளும் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதேவேளை, கனடிய பிரதமரும் லிபரல் கட்சியின் தலைவருமான ஜஸ்டின் ட்ரூடோ மீதான மக்களின் ஆதரவு பலவீனமடைந்து வருவதாகவும் இது லிபரல் கட்சியின் ஆதரவினை பெருமளவு பாதிக்கும் எனவும் வேறு கருத்து கணிப்புகள் மூலம் தெரிய வந்துள்ளது.




# றொறன்ரோவில் போதைப் பொருள் குற்றச் செயலுடன் தொடர்புடைய 3 பேர் கைத்துப்பாக்கியுடன் சிக்கினர்!

றொறன்ரோவில் போதைப் பொருள் குற்றச் செயலுடன் தொடர்புடைய மூன்று பேரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர். இந்த சந்தேக நபர்களிடமிருந்து போதைப் பொருள்கள், ஆயுதங்கள் மற்றும் பணம் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

பொலிஸார் மேற்கொண்ட ரோந்துப் பணிகளின் போது இந்த மூன்று சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நார்த் யோர்க் சுற்றுப்புறத்தில் போதைப்பொருள் பாவனை மற்றும் போதைப்பொருள் கடத்தல் பற்றிய சமூக முறைப்பாடுகள் ஒரு தொகை போதைப் பொருள்களைக் கைப்பற்றி மூன்று சந்தேக நபர்களை கைது செய்ய வழிவகுத்தது என்று றொறன்ரோ பொலிஸார் கூறுகின்றனர்.

ஞாயிற்றுக்கிழமை பொலிஸார் வெளியிடப்பட்ட செய்திக்குறிப்பில் –

31 ஆவது பிரிவைச் சேர்ந்த அதிகாரிகள் அந்த புகார்களை விசாரிக்க ஜேன் ஸ்ட்ரீட் மற்றும் வில்சன் அவென்யூ பகுதிகளுக்குச் சென்றனர்.

அப்பகுதியில் ரோந்துப் பணியில் ஈடுபட்டபோது, சந்தேகத்துக்கு இடமான மூன்று ஆண்களை கராஜ் யூனிட்டில் அதிகாரிகள் கண்டுபிடித்தனர். அவர்களிடம் சன்னங்கள் 9 ஏற்றப்பட்ட கைத்துப்பாகி ஒன்று மீட்கப்பட்டது.

சம்பவ இடத்திலேயே இருவர் கைது செய்யப்பட்டனர். மூன்றாவது சந்தேக நபர் அதிகாரிகளிடமிருந்து தப்பி ஓடினார் எனவும், எனினும் சிறிது தூரம் பின்தொடர்ந்து ஓடி, துரத்திப் பிடிக்கப்பட்டுக் கைது செய்யப்பட்டார் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.



